
# சாந்தியின் கதை: அவளுடைய நம்பிக்கையில் பலத்தை தேடுதல்.



முல்லைத்தீவின் ஒரு பழைய தேவாலயத்தின் அலுகிலுள்ள ஒரு வேப்பமர நிழலில் சாந்தி உட்கார்ந்திருக்கின்றார். அவர் இரு பிள்ளைகளுக்கு தாயானவரும் கணவனை இழந்தவருமாய் இருந்தாலும் அவர் விதவையல்ல. அவர் ஒரு முன்பள்ளியில் பணியாற்றுவதுடன் தனது பிள்ளைகளின் கல்விக்கான செலவீனங்களை ஒன்றுவிட்ட மாதம் மட்டுமே செலுத்தும் திராணியிருப்பினும் அவர் தனது பிள்ளைகளுக்கு மூன்றுவேளை உணவை தினமும் தவறாறு வழங்கிவருகிறார். அவர் "உணவுதானே அவர்களுக்கு மிகவும் அவசியமானது" என்றும் "எங்களுக்கு ஆடம்பரமான தேவைகள் அவசியமானதல்ல" என்றும் கூறுகிறார். அவர் ஒரு பக்தியுள்ள அறிவாற்றல் வளமிக்க கிறிஸ்தவப் பெண் என்பதும் கடவுள்மீது அவர் கொண்டுள்ள அதீத நம்பிக்கையும் அவர் யுத்தத்தின் முடிவில் அவரது அனுபவத்தைப் பற்றி பேசியபோதும் கூட வெளித்தெரிந்தது. "இப்போது நாங்கள் உங்களுடன் இங்கு உயிருடன் இருந்து பேசிக்கொண்டிருப்பதன் காரணம் கடவுளுடைய இரக்கமே ஆகும். ஏராளமான துப்பாக்கிச் ரவைகள் தினமும் எங்களை தாண்டி சென்றன அவற்றில் ஒன்று எங்களை தாக்கியிருந்தால் அங்கேயே நாங்கள் மடிந்திருப்போம். நாங்கள் கால்மிதித்த இடங்கள் யாவும் குருதி தோய்ந்த மண்ணாகவே இருந்தது."

சாந்தி 1983 ஆம் ஆண்டு மன்னாரில் பிறந்தாளெனினும் அவர் ஆறு வயதுடையவளாக இருக்கும்போது அவரது பெற்றோரகள் இறந்துவிட்டனர். பின்னர் பெரும்பகுதியான அவரது இளமைக்காலம் சிறுவர் இல்லத்திலேயே கழிந்தது. இருபது வயதில் அவர் அரச சார்பற்ற நிறுவனமொன்றில் ஒரு காரியதரிசியாக பணியாற்றினார். அங்கு தான் அவரது கணவரான பாலாவை சந்தித்தார். அவர்களது திருமணத்தின் பின்பு, அவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு புலம்பெயர்ந்தனர். அங்கு அவர் இரு பிள்ளைகளுக்கு தாயானதுடன் அங்கேயே ஒரு பராமரிப்பாளராகவும் பணியாற்ற ஆரம்பித்தார். 2009 ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பில் அவர்கள் வசித்துவந்தபோது இறுதிக்கட்ட யுத்தப் பிரதேசத்தினுள் அகப்பட்டுக்கொண்டதுடன் அக்கொலைக்களத்திலிருந்து தப்பிப்பிழைக்க வழியேதுமின்றி இருந்தது. ஆரசாங்க தரப்பினரால் மட்டுமே ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பு வலயமாக சுதந்திரபுரம் என்ற இடம் பிரகடனப்படுத்தப்பட்டதும் மக்கள் அப்பிரதேசத்திற்கு நகரத்தொடங்கினர், ஆனால் அது அவர்கள் கொல்லப்படுவதற்கே எனப் பின்னர்தான் விளங்கியது. “பாதுகாப்பு வலயமோ அல்லது இல்லையோ, இளையவரோ அல்லது முதியவரோ என்ற பேதமின்றி பயங்கரமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன் எல்லா இடங்களிலும் மக்கள் தாக்குதல்களினால் இறந்துகொண்டிருந்தனர். “எறிகணைகள் பதுங்குகுழிகளுக்குள்ளும் வீழ்ந்தன. தகப்பன் ஒருவர் தனது இறந்த மகளுக்கு உடை மாற்றியபோது கொல்லப்பட்டார். ஏனையவர்கள் பட்டினியால் இறந்தனர். இறுதி யுத்தம் நடைபெற்ற அம்மாதத்தில் மரணம் பல கொடூரமான விம்பங்களைக் கொண்டிருந்தது.”




ஏப்ரல் மாதத்தில் இராணுவத்தினர் மாத்தளன் பிரதேசத்தை ஆக்கிரமித்தபோது சாந்தியும் அவரது குடும்பமும் அவ்விடத்தை விட்டு ஏனைய ஆயிரக்கணக்கான மக்களுடன் வெளியேறினர். வன்முறையை தவிர்க்கும்பொருட்டு தண்ணீருள்ள வழியினூடாக செல்லும்போது சாந்தி தனது கணவரிடமிருந்து பிரிக்கப்பட்டார்.

அவர் கடந்த இரண்டு வருடங்களாக அவரைத் தேடினார், ஆனால் இறுதியில் அவர் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்துவிட்டதை பின்னரே அறிந்துகொண்டார். ‘‘இனி அவரைத் தொடர்புகொள்வது சரியானது அல்ல என நான் நினைக்கிறேன், நான் இப்படி இங்கேயே இருப்பது நன்று’’ என அவர் யுத்தத்தின் பின்னரான புதிய வாழ்க்கையை நினைத்தபடி கூறினார், குடும்ப அங்கத்தவர்களது அல்லது உறவினர்களது தொடர்புகள் எதுவுமின்றி ‘‘எனது குடும்பம் யுத்தத்தின் காரணமாக சிதறிப்போயிற்று.’’ அவர் தனிமையாக இருந்து வேதனைப்பட்டுக்கொண்டிருப்பினும் தனது தேவாலய சபையினருடனும் அப்பிரதேசத்திலுள்ள ஏனைய பெண்களுடனும் ஒரு சமூகமாக வாழ முயற்சித்தார். அவர்களது உதவியுடன், சாந்தி ஒரு வீட்டை தனக்கென சொந்தமாக கட்டினார். அத்துடன் ஒரு முன்பள்ளியில் ஆசிரியராகவும் கடமையாற்ற ஒரு வேலையையும் பெற்றுக்கொண்டார். அப்பிரதேசத்திலுள்ள சிறார்களுக்கு இலவச தனியார் கல்விச் சேவையையும் வழங்கிவருவதுடன் அங்குள்ள பெண்களுடன் தனது யுத்தத்தின் பின்னரான சிக்கல்கள் பற்றி பேசி அவற்றை எவ்வாறு தீர்க்கலாம் என கலந்துரையாடுவதில் நேரத்தை செலவிடுகிறார். ‘‘நாங்கள் எங்களது பிரச்சனைகள் பற்றி பேசி அவற்றை எவ்வாறு தீர்க்கலாம் எனவும் கலந்துரையாடுவோம்.’’ என சாந்தி தான் தனது வீட்டுதேவைகளை மாதாந்தம் சுழற்சிமுறையில் நிர்வகிப்பது எப்படி என்பது பற்றி அவர்களுக்குக் கூறுகிறார்.

தனது சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும்பொருட்டு சாந்தி மனிதனுக்கு அவசியமான அடிப்படைத் தேவைகளின ் மீது தனிக்கவனம் செலுத்தினார். ‘‘தண்ணீர் என்பதே எமக்கு மிகப்பாரிய பிரச்சனையாக உள்ளது’’ என சாந்தி கூறுகிறார். தூர இடத்திலிருந்து தண்ணீரை தமது இருப்பிடங்களுக்கு எடுத்துவரும் வழிமுறைகள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. ‘‘நாங்கள் பிற்பகல் 6.30 மணிவரை அடிக்கடி செயலமர்வுகளை நடாத்துகின்றோம். அவை நிறைவடைந்ததும் பிள்ளைகளைத் தனியாக வீட்டில் விட்டு குளிக்கச்செல்ல முடியாது.

மாலைவேளையில் அவ்வாறு சென்றால் அயலவர்கள் எங்களைத் தவறாக பேசுவார்கள்.''



சாந்தியும் அவரது சமூகமும் இப்பிரச்சனை குறித்தும் புறக்கணிக்கப்பட்ட பெண்களுக்களுக்கான வேலைவாய்ப்புக்கள் போன்ற ஏனைய நெருக்கும் இடர்பாடுகள் குறித்தும் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு அச்சமின்றி எழுத்து மூலம் மனு ஒன்றினை சமர்ப்பித்தனர். அரச அதிகாரிகள் தேர்தல் காலங்களில் மட்டும் வந்து அவ்விடங்களை பார்வையிட்டிருந்தும் அவர் தனது நம்பிக்கையின்மீதும் தன்மீதும் ஏனையவர்கள் மீதும் நம்பிக்கையோடிருக்கிறார். யுத்தத்தின் இறுதியில் அவர் கற்பனைசெய்தும் பார்க்கமுடியாத கொடூரமான அட்டூழியங்களைக்கண்டார். ஆயினும் அதனூடாக மீளெழுச்சியையும் ஒற்றுமையையும் உணர்ந்துகொண்டார்: ''நாம் எங்களைப் பாதுகாத்துக்கொள்ளும்பொருட்டு ஒற்றுமையாக பதுங்குகுழிகளை வெட்டினோம். தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டபோது நாங்கள் ஒருமித்த வண்ணம் குளிப்பதற்குச் சென்றோம். சூழ்நிலையின் நிமித்தம் அல்லாமல் மக்கள் ஒற்றுமையாக இருந்தனர்.''